கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!... முதல் பக்கத் தொடர்ச்சி

உண்மைக்குப் புறம்பான தகவலைத் தெரிவிக்கும்போது, அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எதிர்க்கட்சியினர் மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்து கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காவல்துறை, ஆளுங்கட்சியினர் மீது அதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறதா என்பதுதான் எங்களுடைய கேள்வி. எதிர்க்கட்சியினருக்கு ஒரு அணுகுமுறை, ஆளுங்கட்சியினருக்கு மற்றொரு அணுகுமுறை என்ற நிலைதான் இருக்கிறது.

ஆளுங்கட்சியினரின் தரக்குறைவான பேச்சுகள்!

இந்த ஆட்சி அமைந்த பிறகு, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலர் சமூக வலைதளங்களில் பெண்களுக்கு எதிராகப் பதிவிடும் தரக்குறைவான கருத்துகள், பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டும் வகையில் இருக்கிறது. அதே போல, ஒவ்வொரு நாளும் பல்வேறு குற்றச் சம்பவங்கள் நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

ஆனால், முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறையால், இந்தக் குற்றச் சம்பவங்களைக் குறைக்கவோ, தடுத்து நிறுத்தவோ என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்துச் சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினால், அதற்கு முறையான பதிலை அளிப்பதில்லை. அதற்கு பதிலாக, பஞ்ச் டயலாக் பேசிவிட்டு, கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் வேறு விஷயங்களைப் பேசியபடி முதலமைச்சர் சென்றுவிடுகிறார். மக்களின் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வேண்டிய அரசிடம் மக்கள் எதிர்பார்ப்பது இதைத்தானா?

ஒரு குழந்தை காணாமல் போய் இத்தனை நாட்களாகியும், அந்தக் குழந்தையைக் கண்டுபிடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்துத் தெளிவான பதில் இல்லை. அதே போல, காணாமல் போன ஒரு செவிலியர் குறித்துப் புகார் அளிக்கச் சென்றவர்களிடமே, அவரைப் பற்றி அவதூறாகப் பேசும் அளவுக்குக் காவல் துறையின் அணுகுமுறை இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது!


இப்படிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாகப் பல்வேறு கேள்விகள் எழுந்துகொண்டிருக்கும் நிலையில், அவற்றுக்குப் பொறுப்பேற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய முதலமைச்சர், இப்பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதும் ஓர் அரசின் அடிப்படைக் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதில்தான் அரசின் பொறுப்புணர்வு வெளிப்பட வேண்டும்.

முதல்வர் நிர்வாகத் திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்!

எந்த ஆணும் வந்து ஒரு பெண்ணுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியமே கிடையாது. யாரும் பெண்களுக்கு அண்ணனாக இருக்க வேண்டாம். நீங்கள் உங்கள் கடமையை மட்டும் செய்தாலே போதும். மாறாக அண்ணனா இருக்கிறேன், சீர் கொடுக்கிறேன் என்றெல்லாம் சொல்லி பெண்களை ஏமாற்றியது போதும். நீங்கள் உங்கள் கடமையை மட்டும் செய்யுங்கள். குறிப்பாக காவல் துறை தன் கடமையை செய்யக் கூடிய அளவுக்கு உங்கள் நிர்வாகத் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; அரசு அலுவலகங்களில் 'ரீல்ஸ்' எடுக்கக்கூடாது என்ற விதியை மீறி, கொடைக்கானல் அருகே ஒரு அரசு அலுவலகத்தில் த.வெ.க. காரங்க, ரீல்ஸ் போட்டிருக்காங்களே. 'நடவடிக்கை பாயுமா'

போண்டி : **ஆமாய்யா; நானும் டி.வி.யிலே பார்த்தேன். நடவடிக்கையாவது எடுப்பதாவது! ஏற்கனவே சட்டசபையிலேயே அதுமாதிரி விஜய் செய்ததுதானே. முன் ஏறு எப்படியோ அப்படியே பின் ஏறும் போகும்!**

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

ஒன்றிய, நகர, பகுதிக் கழக அமைப்புகளின் மறுசீரமைப்பு மூலம் கழகத் தலைவரின் கரத்தை வலுப்படுத்துவோம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம் – மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!

காஞ்சிபுரம், அக். 23 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பகுதிக் கழக அமைப்பு களின் மறுசீரமைப்பு மூலம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்துவோம் என்று மாவட்டக்கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (21.10.2026-புதன்கிழமை) கருங்குழி முகுந்தன் மஹாலில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் வரவேற்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் பேசினார்.

காஞ்சிபுரம் மாவட்ட மறுசீரமைப்பு தலைமைக் கழக பிரதிநிதிகள் மருது கணேஷ், திருமதி ராணி ரவிச்சந்திரன், செங்கல்பட்டு மாவட்ட மறுசீரமைப்பு தலைமைக் கழகப் பிரதிநிதிகள் அண்ணாதுரை எம்.பி., கோவி. லெனின், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஒ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி கு. மலர்விழி, பொருளாளார் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், வழக்கறிஞர் இ.பரந்தாமன், கழக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப. அப்துல் மாலிக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநில இலக்கிய அணி ஆர்.தசரதன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.சிகாமணி, பொன்.சசிகுமார், எஸ். உசேன், நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர்கள் பொன்.சிவக்குமார், கண்ணன், ஜி.தம்பு கோகுல கண்ணன், ஏழுமலை, ஏ.சிற்றரசு, கே.எஸ்.ஆர்.கார்திகேயன், எம்.எஸ்.பாபு, கெ.ஞானசேகரன், பி.எம். குமார், பி.எம்.பாபு, க.குமணன், டி.குமார், பி.சேகர், இ.சரவணன், காஞ்சிபுரம் மாநகர பகுதிச் செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே. திலகர், ஆ.தசரதன், வெங்கடேசன், கே.ஏ. செங்குட்டுவன், பேரூர் செயலாளர்கள் ஆ.சுந்தர மூர்த்தி, என்.பாரிவள்ளல், என். பாண்டியன், மோகன் தாஸ், வி.எழிலரசன், நே.சிற்றரசு, மயிலை தா.வேலு, ஏ.பி.நந்தகுமார், தா.உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன், எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், க.தேவராஜ், கதிர் ஆனந்த், தேர்தல் பிரச்சாராத்திற்கு வந்து வாக்கு சேகரித்த நம் கழகத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராசாத்தி கருணாநிதி, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, க.பொன்முடி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, டி.ஆர்.பி.ராஜா, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த ஜாஹிருல்லா,எம். எல்.ஏ., திருமதி பிரேமேலதா விஜயகாந்த் எம். எல்.ஏ., திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிடர் வெற்றி கழகம் மல்லை சத்யா, தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ., புதிய புரட்சி கழகம் ஒ.இ.சங்கர், எஸ்.டி.பி.ஐ., நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், மற்றும் மதுராந்தகம் தொகுதி வாக்காளர்களுக்கும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக திராவிட முன்னேற்றக் கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

துரை எம்.பி., கோவி. லெனின், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஒ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி கு. மலர்விழி, பொருளாளார் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், வழக்கறிஞர் இ.பரந்தாமன், கழக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப. அப்துல் மாலிக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநில இலக்கிய அணி ஆர்.தசரதன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.சிகாமணி, பொன்.சசிகுமார், எஸ். உசேன், நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர்கள் பொன்.சிவக்குமார், கண்ணன், ஜி.தம்பு கோகுல கண்ணன், ஏழுமலை, ஏ.சிற்றரசு, கே.எஸ்.ஆர்.கார்திகேயன், எம்.எஸ்.பாபு, கெ.ஞானசேகரன், பி.எம். குமார், பி.எம்.பாபு, க.குமணன், டி.குமார், பி.சேகர், இ.சரவணன், காஞ்சிபுரம் மாநகர பகுதிச் செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே. திலகர், ஆ.தசரதன், வெங்கடேசன், கே.ஏ. செங்குட்டுவன், பேரூர் செயலாளர்கள் ஆ.சுந்தர மூர்த்தி, என்.பாரிவள்ளல், என். பாண்டியன், மோகன் தாஸ், வி.எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், குணசேகரன், நாத்திகம் நாகராஜன், எஸ். மாலதி, ஜியாவு தீன், பாரத், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.சஞ்சய் காந்தி, க.பால்ராஜ் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தீர்மானம் – 1

கடந்த அக்டோபர் 6 ஆம் தேதி நடைபெற்ற மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களுக்கு தேர்தல் பணியாற்றிய காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் மட்டுமல்லாமல் மற்றும் தேர்தல்பணிக்கு வந்து சிறப்பான முறையில் பணியாற்றிய மாண்புமிகு எ.வ.வேலு மற்றும் முன்னாள் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன்,எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, எஸ்.ரகுபதி, சேலம் இராஜேந்திரன், சா.மு.நாசர், செஞ்சி மஸ்தான், ஆர்.காந்தி, சி. வி.கணேசன், டி.எம்.செல்வகணபதி, மாவட்டக் கழக செயலாளர்கள் எஸ். ஆர்.சிவலிங்கம், எம்.எஸ். தரணிவேந்தன், எஸ்.சுதர்சனம்,ஆர்.டி.சேகர், திருத்தணி சந்திரன், நே.சிற்றரசு, மயிலை தா.வேலு, ஏ.பி.நந்தகுமார், தா.உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன்,எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், க.தேவராஜ், கதிர் ஆனந்த், தேர்தல் பிரச்சாராத்திற்கு வந்து வாக்கு சேகரித்த நம் கழகத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராசாத்தி கருணாநிதி, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, க.பொன்முடி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, டி.ஆர்.பி.ராஜா, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த ஜாஹிருல்லா,எம். எல்.ஏ., திருமதி பிரேமேலதா விஜயகாந்த் எம். எல்.ஏ., திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிடர் வெற்றி கழகம் மல்லை சத்யா, தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ., புதிய புரட்சி கழகம் ஒ.இ.சங்கர், எஸ்.டி.பி.ஐ., நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், மற்றும் மதுராந்தகம் தொகுதி வாக்காளர்களுக்கும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக திராவிட முன்னேற்றக் கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம்– 2

கழகம் மறு சீரமைப்பு சம்பந்தமாக தலைமைக் கழகம் அறிவித்தபடி தலைமைக் கழகத்தின் பிரதிநிதிகள் சி.என்.அண்ணாதுரை, எம்.பி., கோவி. லெனின், வழக்கறிஞர் மருது கணேஷ், திருமதி ராணி ரவிச்சந்திரன் ஆகியோரின் ஆலோசனைப்படி ஒன்றியங்களையும், நகரங்கையும், பகுதிகளையும் பிரிப்பது சம்பந்தமாக விரைவில் நடவடிக்கை மேற்கொள்வது என் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம்– 3

வரும் நவம்பர் 27 எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இளைஞரணி செயலாளர் பிறந்த நாளை நலத்திட்ட உதவிகள் செய்து சிறப்பாக கொண்டாடுவது என ஒரு மனதாக தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேயர் பிரியா மீது அவதூறு: நடவடிக்கை எடுக்காமல்

காவல்துறை செயல்படும் லட்சணம் இதுதானா முதல்வரே!

தி.மு.க. ஐ.டி.விங் ட்விட்டர் கேள்வி!

சென்னை, அக். 23 - பெருநகர சென்னை மாநகராட்சியின் மாரியாதைக்குரிய பெண் மேயர் திருமிகு. பிரியா அவர்கள் மீது, த.வெ.க மாஃபியாக்கள் தங்கள் Abusive Warriorsஜ வைத்து சமூக வலைதளங்களில் அருவருப்பாகவும், ஆபாசமாகவும் தொடர் அவதூறுகளைப் பரப்பி வருவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது! ஆனால், டம்மி விஜய் குறித்து யாராவது பேசிவிட்டால் மட்டும் Victim Card எடுத்துக்கொண்டு ஊருக்கு உபதேசம் எடுக்க கிளம்பிவிடுவார்கள்.

மேயர் அவர்கள் ஆதாரங்களோடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், அவர்கள் 'ஆளுங்கட்சி குண்டர்கள்' என்ற ஒரே காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கத் தயங்கி, கைகட்டிச் சேவகம் செய்கிறதா காவல்துறை? யார் கொடுத்த தைரியம் இது? யார் போட்ட உத்தரவு?

ஒருபுறம் 137 கிலோ 'மெத்' போதைப்பொருள் கடத்தும் த.வெ.க. மாவட்ட நிர்வாகிக்கு துணை போயிருக்கிறது காவல்துறை! மறுபுறம் ஒரு பெண்ணை, அதுவும் தலைநகரின் மேயரை ஆபாசமாகப் பேசும் கட்சிப் பொறுக்கிகள் மீது வழக்கு பதிய கூட தயங்குகிறது! காவல்துறை உண்மையில் யார் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறதா? முதல்வரா அல்லது கடத்தல்காரர்கள் மற்றும் அவதூறு கும்பலின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா?

இதுதான் முதல்வரின் கட்டுப்பாட்டில் காவல்துறை செயல்படும் லட்சணமா? அல்லது "முதலமைச்சர் விஜய்யே உருப்படியாக எந்த நிர்வாகமும் செய்யாமல் 'ரீல்ஸ்' போட்டுக்கொண்டு சும்மாதான் இருக்கிறார், நாமும் ஏன் வேலை செய்ய வேண்டும்?" என்று காவல்துறையும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதா?

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் கேள்விகளை எழுப்பியுள்ளது.

'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சியின்

ஒளிப்பதிவாளர் முருகன் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 23 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியில் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிய முருகன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின்

மூத்த ஒளிப்பதிவாளர் முருகன் மறைவு!

சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) ஆழ்ந்த இரங்கல்!

சென்னை, அக். 23 –



கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் மூத்த ஒளிப்பதிவாளராகப் பணியாற்றி வந்த ஊடகவியலாளர் நண்பர் முருகன் அவர்கள் திடீர் மாரடைப்பு காரணமாக காலமானார் என்ற செய்தி அறிந்து சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) மிகுந்த அதிர்ச்சியும், ஆழமான துயரமும் அடைகிறது.

ஊடகத்துறையில் தனது அர்ப்பணிப்புடன் கூடிய பணியால் அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்றவர் ஒளிப்பதிவாளர் முருகன். களத்தில் நின்று செய்திகளைத் துல்லியமாகத் தன் கேமராவில் காட்சிப்படுத்துவதிலும், இளைய தலைமுறை ஒளிப்பதிவாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதிலும் அவர் ஆற்றிய பங்கு என்றென்றும் நினைவு கூரத்தக்கது.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு திறமையான ஊடகத் தொழிலாளியை இன்று ஊடக உலகம் இழந்து நிற்கிறது. அவரது இந்த திடீர் மறைவு சென்னை பத்திரிகையாளர் குடும்பத்திற்கும், ஊடகத் துறைக்கும் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும்.

ஒளிப்பதிவாளர் முருகன் அவர்களின் மறைவால் வாடித் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிப் பணியாளர்கள் மற்றும் சக ஊடக நண்பர்கள் அனைவருக்கும் சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் (MUJ) சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) தெரிவித்துக் கொள்கிறது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக அமைப்புகளின் மறு சீரமைப்பு சம்பந்தமாக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ச.இனிய அரசு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மறு சீரமைப்பு தலைமை கழகப் பிரதிநிதிகள் என்.அண்ணாதுரை எம்.பி., கோவி லெனின், என்.மருது கணேஷ், திருமதி.ராணி ரவிச்சந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள். ஒ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி. கு.மலர்விழி. சன் பிராண்ட் ஆறுமுகம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் நேற்று முன்தினம் (21.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், வார்டு181க்குட்பட்ட கொட்டிவாக்கம், கிழக்குக் கடற்கரை சாலையில் ரூ.97.98 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வார்டு அலுவலகக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.சி.ஆர். ப. சரவணன், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், மண்டல அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.